அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :175/2016
தேதி.:17/11/2016

**ஜல்லிக்கட்டு தடையை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த சீராய்வு மனு உச்சநீதிமன்றத்தில் தள்ளுபடி செய்தது வருத்தத்தை அளிக்கிறது.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை**

ஒருவரால் செய்யமுடியாத காரியத்தை வேறொருவன் செய்வதைத்தான் வீரம் என்று குறிப்பிடுகிறோம். அப்படிப்பட்ட வீரத்தை வெளிப்படுத்தும் விதமாக விளையாடும் வீர விளையாட்டுதான் ஜல்லிக்கட்டு. தமிழர்களின் பாரம்பரியமான விளையாட்டுதான் இந்த ஜல்லிக்கட்டு.

ஆனால் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு தமிழ்நாட்டில் 2014 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்டது. அதை தொடர்ந்து தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க மத்திய அரசு கடந்த ஜனவரி மாதம் 8-ஆம் தேதி சில விதிமுறைகளோடு ஜல்லிக்கட்டு விளையாட்டை நடத்த அனுமதி வழங்கியது. அதை எதிர்த்தும் விலங்குகள் நல ஆர்வலர்கள் உச்சநீதிமன்றத்தை நாடி போட்டி நடத்தும் நாளுக்கு முன் தடை வாங்கியது.

இதனிடையே ஜல்லிக்கட்டு தடையை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த சீராய்வு மனு உச்சநீதிமன்றத்தில் நேற்று தள்ளுபடி செய்தது வருத்தத்தை அளிக்கிறது. கருப்பு பண விவகாரத்தில் பரபரப்பாகவும், யாரும் எதிர்பார்க்காத விதத்தில் ரூ.500 ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்த மோடி அரசு, தமிழ்நாட்டின் பாரம்பரியமான வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு அனுமதி அளிக்கலாமே ?

கருப்பு பணத்தை ஒழிப்பதற்கு முக்கியத்துவம் அளித்த மத்திய அரசு, அதே முக்கியத்துவத்தை ஜல்லிக்கட்டுக்கு அளித்து போட்டிகளை நடத்த நிரந்தர அனுமதி அளிக்க வேண்டும். வரும் 2017 -ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு விளையாட்டுடன் பொங்கல் விழாவை கொண்டாடும் விதமாக அனுமதி அளிக்க வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்